மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 1 | வார இதழ் | 30-11-58 | விலை 12 காசுகள் | ஒலி !

பாரத நாட்டில் 21,00000 பாழ்!

அண்ணு சொன்ன கசாப்புக் கடைக்கும் லாயக்கற்ற சர்க்கார்!

வேலைத் தெரியாத தச்சர்களுக்கு மாதச் சம்பளம் ஐந்தாயிரம்!!

ஏதும் தெரியாதவர்கள் இங்கு நிபுணர்களாம்!

கொள்ளையடித்துவந்த வெள்ளைக்காரனை விரட்டியடித்துவிட்டு—பாரதமாதாவின் விலங்குகளை நொறுக்கி எறிந்துவிட்டு ஆட்சிபீடத்தில் நாங்கள் அமர்ந்த பின்பு —பாராளுமன்றத்திற்கு நாங்கள் சென்ற பின்பு இந்த நாட்டைப்பார்! இந்த நாட்டின் வளத்தைப் பார்! எங்கள் திறமையைப் பார்! எங்கள் ஆற்றலைப் பார்! எங்கள் செயலைப் பார்! சங்குகள் முழங்குகின்றன—ஆலைகள் புகையை கக்குகின்றன! அஞ்சு வருஷ திட்டத்தால் பஞ்சத்திற்கே பஞ்சம்! பார்! பார்! பஞ்சசீலர் ஆட்சியை!

உலகத்தில் நடக்காத அதிசயங்களை செய்துக் காட்டினோம்! இந்த வித்தையைக் கற்றவர் யார்? எங்கள் நேரு! எங்கள் நேரு! எங்கள் குருநாதர் வேலையைக் கண்டு குருஷ்சேவ் அதிசயப்படுகிறார்! மடையர்களே! முட்டாள்களே! குருஷ்சேவ் அதிசயப்படுகிறார்!

இந்தஉலகத்தில் எத்தனையோ நாடுகள் உண்டு! அந்தந்த நாடுகளில் அரசாங்கமும் உண்டு! அந்தந்த அரசாங்கத்தை ஏற்று நடத்த ஆங்காங்கே அமைச்சர்களும் உண்டு! ஆனால்,

எங்கும் புகழ் தங்கும் நாடு
எங்கள் பாரதத் திரு நாடு
பஞ்சத்தால் ஏங்காத நாடு
பாலும் தேனும் ஓடும் நாடு
[எங்கள்]
வஞ்சமில்லா பஞ்சசீலர்
ஆளும் நாடு
அஞ்சாத பண்டிதர் ஆளும்
நாடு
[எங்கள்]

இப்படிப்பட்ட ஈடு இணையற்ற நாட்டை இந்த வையம் கண்டிராது, வாளும் கண்டிராது!

"இமயம் முதல் குமரி வரை ஒரே நாடு" என்று பறைசாற்றி வரும் புத்திசாலிகள்—நாள் தவருமல் இப்படி புகழ் மாலைகளை சூட்டிக்கொண்டு ஊர்ஊராக அலைந்து வருகிருர்கள்! உலகத்திலேயே இவர்களுக்கு ஈடுஇணையற்றவர்கள் கிடையாது என்று இந்த பேத புத்தி படைத்தவர்கள் பேசி வருகிருர்கள்!

முதலமைச்சர் காமராஜர் முதல் கடைசிஅமைச்சர்கள்வரை பஞ்சசீலரின் பெருமைகளைப் பற்றி எடுத்து, உரைத்து வருகின்றனர்!

"திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கையாலாகாதவர்கள்-எதையும் செய்ய திறைமையற்றவர்கள்; திராவிட நாடு என்பது பித்தலாட்டம்-திராவிடநாடு ஒருநாளும் கிடைக்காது" என்றெல்லாம் உளறி வருகிருர்கள்!

நம்மைப் பார்த்து "கையாலாகாதவர்கள்" என்று இந்த காமராஜர் கூறுகிருர்! திறமையில்லாதவர்கள் என்று பேசுகிருர்!

உங்களுடைய திறமையைப் பார்த்து ஊர் சிரிக்கிறது! உலகம் நகைக்கிறது! நீங்கள் செய்கிற ஊழல் முடைநாற்றம் எடுக்கிறது, இதைப் பார்த்து மற்ற நாட்டவர்களெல்லாம் கேலி செய்கிருர்கள்! உங்கள் திறமையை எடை போட்டுப் பார்க்கிருர்கள்!

மாட்டுப் பெட்டிக்காரர்கள் ஐந்தாண்டு திட்டங்களைக் காட்டி பெருமை பேசுகிருர்கள்! உலகத்திலேயே இதுபோன்ற திட்டங்கள் கிடையாது என்று கூறுகிருர்கள்!

எப்படி இருப்பார்கள்? உங்களைப் போல் இருந்தால் உலகமே இந்நேரம் அழிந்திருக்குமே!

பத்து வருடங்களாக உங்க

(3-ம் பக்கம் பார்க்கவும்)

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 1 | 30-11-58 | ஒலி 5

ஐந்தே ஆண்டில் திராவிட நாடு!

எவருக்கும் கிடைக்காத ஒரு தலைவனை—இதுவரை எந்தக் கட்சியும் பெற்றிராத ஒரு ஒப்பு உயர்வற்ற அறிஞனை நாம் பெற்றிருக்கிறோம். திராவிட சமுதாயம் தோன்றிய காலந் தொட்டு இன்றுவரை பார்த்தும் கேட்டும் இல்லாத ஒரு பெரும் தலைவனை நாம் பெற்றிருக்கிறோம்!

தமிழகம் புலவர்களைக் கண்டிருக்கிறது—ஆனால். அவர்களுடைய புலமைகள் அனைத்தும் பொல்லாங்குக்கே பயன் பட்டு வந்தன!

தமிழகம் நாவலர்களைப் பார்த்திருக்கிறது—ஆனால், அவர்களுடைய நாவன்மைகள் அனைத்தும் நாட்டிற்குத் தீங்கே விளைவித்து வந்தன!

தமிழகம் தலைவர்களைத் தந்திருககிறது — ஆனால் அந்தத் தலைவர்கள் அனைவரும் தங்களுக்காகவே வாழ்ந்து மடிந்தார்கள்!

நம்மைப் போல் வேறு எந்த சந்ததியாரும் ஒரு விடுதலை வீரனை, ஆற்றல் மிகுதீரனை, அறிவின் சுடரொளியை, சீர்திருத்தச் செம்மலை, தலைவனாகப் பெற்றதுமில்லை—இனிப்பெறப் போவதும் இல்லை!

அன்போடு, ஆசையோடு, நல்ல பாசத்தோடு "**அண்ணா**" என்று அழைக்கப்பட்டத் தலைவர்கள் எங்கு தோன்றினார்கள்? எப்போதுதான் தோன்றினார்கள்? நாட்டு மக்களால் "**தந்தை**" என்று அழைக்கப்பட்டத் தலைவர்கள்—இந்த நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டில்தான் தோன்றினார்கள்!

ஒரு தலைவனை "**அண்ணா**" என்று பாசம் கொண்டாடி அழைத்த நாடும் இல்லை-இப்படி உறவு கொண்டாடி பெருமைப்பட்ட மக்களுமில்லை!

நாம் தான் இத்தகைய அரும் பெரும் தலைவனைப் பெற்றிருக்கிறோம்! இது நமக்குக்கிடைத்த பாக்கியம் என்று கூட சொல்லலாம்! இந்த சந்தர்ப்பத்தை நாம் பயன் படுத்திக் கொள்ளவில்லையானால், இந்த நேரத்தில் நாம் எழுச்சி பெற்று எழவில்லையானால், இந்த நேரத்தில் நாம், நம்முடைய நாட்டை மீட்கப் புறப்படவில்லையானால்—நாம் நிச்சயமாக அழிந்தோம்! பிறகு என்றென்றும் மாற்றானுக்கு மண்டியிட்டுத்தான் வாழ்வோம்!

ஒரு நாடு எழுச்சி பெற, ஒரு நாடு விடுதலை கீதம் இசைக்க, ஒரு நாடு தன்னைத்தானே செப்பனிட்டுக் கொள்ள ஆற்றல் மிகு தலைவர்களைப் பெற்றிருக்க வேண்டும், அஞ்சா நெஞ்சம்படைத்த வீரர்களைப் பெற்றிருக்க வேண்டும்—அந்தத் தலைவர்களுக்கு மக்களுடைய மனதைக் கவரும் வல்லமையும் இருக்க வேண்டும்! இத்தகைய தலைவர்களைக் கொண்ட நாடுதான் விடுதலை பெறும்!

நாம் இத்தகைய ஆற்றல் படைத்தத் தலைவனைப் பெற்றிருக்கிறோம்! அண்ணாவின் நா அசைந்தால் இன்று நாடே அசைகிறது! அண்ணாவின் பேனா அசைந்தால் இன்று ஆயிரமாயிரம் மக்கள துள்ளி எழக் காத்திருக்கிறார்கள். பேச்சால், எழுத்தால்நாட்டுமக்களைக் கவர்ந்தவர் அண்ணா 'ஒருவர்தான்'! அவருடைய காலத்தில் திராவிடம் விடுதலை[illegible]றவில்லை என்றால் நாம் எப்போது தான் வாழ்வு பெறுவோம்? இதை திராவிட நாட்டு மக்கள் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்! அதற்கேற்ப செயலாற்றவும் புறப்பட வேண்டும்!

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சுயமரியாதைக்காரர்களாகத் தோன்றிய நாம், நாட்டிலே பலப்பல புதுமைகளை செய்துக் காட்டி இருக்கிறோம்! ஜாதி என்னும் மாயப் பிசாசை விரட்டியடித்திருக்கிறோம்! மதமென்னும் திரையை கிழித்திருக்கிறோம்! புராணமென்னும் பித்தலாட்டங்களை ஒழித்திருக்கிறோம்! சாஸ்திரமென்னும் சதிச் செயல்களை ஒழித்திருக்கிறோம்! சடங்கு என்னும் மூடக் கொள்கைகளை அழித்திருக்கிறோம்! இலட்சக் கணக்கான மக்களை முட்டாள்த் தனமானக் கொள்கைகளுக்குப் பலியாகாமல் தடுத்திருக்கிறோம்!

இதற்கு முன்பு நாம் யாரென்று அறியாமல் கிடந்தோம், எவர் என்று புரியாமலேயே கிடந்தோம்! இன்று நம்முடைய இனம் **திராவிட** இனம் என்பதை புரிந்து கொண்டிருக்கிறோம்! நாம் வாழும் நாடு அடிமை வாழ்வு வாழ்கிறது என்பதையும் தெரிந்து கொண்டிருக்கிறோம்! இதற்குப் பின்பும் நாம் விடுதலை முரசம் தட்டவில்லை என்றால், போர்ப்பறையை முழக்கவில்லை என்றால்—நாம் வாழ்வதுதான் எப்படி?

திராவிடத்தின் விடுதலை இயக்கமாக விளங்கும் நம்முடைய கழகத்தில் ஏறத்தாழ இரண்டு இலட்சம் மக்கள் உறுப்பினராக இருக்கின்றனர். அத்தனை பேரும் இளைஞர்கள், அத்தனை பேரும் வாலிபர்கள், அத்தனை பேரும் செயலாற்றும் திறமைப் படைத்தவர்கள்! அனைவரும் தொண்டர்கள்—எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள்! நொடிப் பொழுதில் நாட்டை மீட்கும் வல்லமையும் ஆற்றலும் அவர்களுக்கு உண்டு, என்றாலும் நாம் இன்னும் அடிமைகளாகவே வாழ்கிறோம்! நம்முடைய நாட்டு மக்களில் சிலர் கங்காணியாகவும் வாழ்கின்றனர்! காரணம் யாது? நாம் இன்னும் செயல்பட வேண்டும், செயல் பட வேண்டும்!

பரம்பரை பரம்பரையாக மூடப் பழக்கத்தில் மூழ்கிக் கிடக்கும் மக்களை கரை சேர்ப்பது நம்முடைய கடமையாகும்!

நாம் பேசினால் நம்மை நாத்திகர்கள் என்று தூற்றுவார்கள்—கடவுளை ஒழிப்பவர்கள் என்று கூறுவார்கள்! நம்முடைய கொள்கைகளை வேம்பெனக் கொள்வார்கள்! நம்மை தீண்டாதவர்களாகவே மதிப்பார்கள்! என்றாலும் நாம் அவர்களைத் திருத்தியாக வேண்டும்! இதை கூட்டங்கள் போட்டு பேசுவதால் மட்டும் ஒழிக்க முடியாது, ஏடுகளில் எழுதிக் காட்டுவதால் மட்டும் அழிக்க முடியாது!

நம்முடைய அண்ணா பேசுகிறார் என்றால் இலட்சக் கணக்காக மக்கள் கூடி நின்று கேட்கின்றனர்! நம்முடைய அண்ணா எழுதுகிறார் என்றால் அதை ஆயிரக்கணக்கான மக்கள் படித்து மகிழ்கின்றனர்! நாம் தேர்தலில் நின்றாலோ ஒரு பதினைந்து பேர்கள்தான் வெற்றி பெற முடிகிறது! காமராஜர் பேசினால் ஒரு பத்துப் பதினைந்து பேர்கள் தான் கூடுகிறார்கள்—காமராஜர் எழுதினால், எழுதமாட்டார்-அப்படி எழுதினாலும் அவரே தான் அதைப் படித்துக் கொள்ள வேண்டும்! ஆனால், தேர்தலிலோ அவர்கள் 150 பேர்கள் வெற்றி பெறுகிறார்கள்! காரணம் என்ன? இந்த இடத்தில் தான் நம்முடைய இயக்கத் தோழர்கள் நன்கு சிந்திக்கவேண்டும்!

இந்த நாட்டு மக்களிடம் மண்டிக் கிடக்கும் மூடப் பழக்க வழக்கங்களை அவர்கள் நன்கு பயன் படுத்திக் கொள்ளுகிறார்கள்!

"அண்ணாதுரைக்கு ஓட்டுகளைப் போடாதீர்கள். அவர் கோயில்களை இடிப்பார், குளங்களை மண்ணைப் போட்டு மூடுவார், கடவுள் அழிந்து விடும்" என்று பிரச்சாரம் செய்து நம்மை தோற்கடிக்கிறார்கள்!

"நெடுஞ்செழியன் வெற்றி பெற்றால், கருணாநிதி சட்ட மன்றத்திற்குள் வந்தால் ஜாதிகள் மறைந்துவிடும், மதங்கள் ஒழிந்துவிடும்" என்று மக்களிடம் சொல்லி அவர்களுடைய மனதை மாற்றுகிறார்கள்! இந்த நிலையில் நாம் எப்படி வெற்றி பெற முடியும்?

இன்றைய தினம் தமிழகத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் நம்முடைய இயக்கத் தோழர்கள் இருக்கக் கூடும்-இருக்கிறார்கள்! அப்படிப்பட்ட இளைஞர்கள் இருக்கும்

(5-ம் பக்கம் பார்க்கவும்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளால் அழிந்துபோன தொகை ஏராளம்! ஏராளம்!

சுதந்திரம் கிடைத்த பின்பு உங்களால் ஒழிந்துபோன செல்வங்கள்— அழிந்துபோன பொருள்கள் எண்ணிச் சொல்ல இயலாது! கணக்கிட்டுக் கூறமுடியாது? நீங்களா எங்களைபார்த்து திறமையற்றவர்கள் என்று கூறுகிறீர்கள்? நீங்களாஎங்களைப் பார்த்து ஆற்றலற்றவர்கள் என்று சொல்லுகிறீர்கள்? நீங்கள் செய்த அட்டூழியங்களுக்கு கணக்குண்டா? எல்லையுண்டா?

சுமார் 600 கோடி ரூபாய் செலவில் மூன்று உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்த திட்டமிட்டிருக்கிறீர்கள்! இதுவரையில் திட்டமிட்டபடி எதுவுமே நடைபெறவில்லை? அதற்குள் எத்தனை எத்தனை ஊழல்கள்! பாராளு மன்றத்தில் நடைபெற்ற காரசாரமான வாக்குவாதத்தை காமராஜரும், கக்கனும் கவனித்திருப்பார்கள் என்றே நினைக்கிறேம்!

இந்த உருககுத் தொழிற்சாலைக்கு ஜெர்மன் நாட்டிலிருந்து தச்சர்களை அழைத்தார்களாம்! அங்கிருந்து 32 தச்சர்கள் இங்கு வந்தார்களாம்! இவர்களுக்காக ரூ 21 இலட்சத்தை செலவு செய்திருக்கிருர்களாம்! அதாவது மாதாமாதம் ஒரு தச்சருக்கு 5000 ரூபாய் சம்பளம் தரப்படுகிறதாம்! ஆனல் இந்த தச்சர்கள் செய்யும் வேலையை இந்த நாட்டு தச்சர்களே சுலபமாக செய்வார்களாம்! ஆலோசனைக்காக அந்நியநாட்டிலிருந்து ஏராளமான சம்பளத்தில் பல நிபுணர்களை வரவழைத்தார்களாம்! நமக்குத் தேவையான விஷயங்களில் ஆலோசனைக் கூற கொஞ்சமும் அருகதையற்றவர்களாம்! ஒரு விஷயமும் தெரியாதவர்களாம்! மேலும் இந்த ஆலோசனைக்காக வந்தவர்களில் பலர் நமக்கு தளவாடச் சாமான்களைக் கொடுக்கும் அந்நிய கம்பெனிகளின் முதலாளிகளாம்! இவர்கள் நமக்கு ஆலோசனை சொல்வதை விட அவர்கள் கம்பெனியில் உள்ள சாமான்களை நம் கழுத்தில் கட்டவே கண்ணும் கருத்துமாக இருந்தார்களாம்!

ஏற்கனவே பல தில்லுமல்லுகளை செய்து அதனல் சர்க்காரால் கண்டித்து விடப்பட்ட காண்டிராக்டர்களிடமே மீண்டும் இந்த வேலையை ஒப்படைக்கப்பட்டிருக்கிறதாம்! இந்தத் தொழிற்சாலைக்காக இறக்குமதி செய்யப்பட்ட சில சாமான்கள்—சரியான கண்காணிப்பு இல்லாமல் திருட்டுப் போயிருக்கின்றனவாம்! இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் அதிகாரிகளுக்கு சிறிதும் பொறுப்புணர்ச்சி கிடையாதாம்! இந்த அநியாயங்களால் இந்தத் திட்டத்தின் மதிப்பீடு நீண்டு கொண்டே வந்து இப்போது 45 சதவிகிதம் உயர்ந்திருக்கிறதாம்!

உருக்குத் தொழிற்சாலையில் மட்டும் இத்தனை அக்கிரமங்களும், அநியாயங்களும், கொள்ளைகளும் நடைபெற்றிருந்தால் மற்ற மற்ற துறையில் இன்னும் எத்தனை எத்தனை அநியாயங்கள் நடைபெற்றிருக்கும்?

வெள்ளைக்காரனை நாம் ஏன் விரட்டியடித்தோம்! அவனுக்கு பதில் நாம் கொள்ளையடிக்கத்தானு? நேர்மையுள்ள காந்தியவாதிகள் நெஞ்சில் கைவைத்து சொல்லட்டும்!

"அண்ணுதுரைக்கு அரசியல் தெரியாது, அண்ணுதுரைக்கு பொருளாதாரம் புரியாது, அண்ணுதுரைக்கு சட்டசபை அனுபவம் போருது, அண்ணுதுரைக்கு வார்த்தைகளை அடுக்கத்தான் தெரியும் - அண்ணுதுரைக்கு கம்பரசம், காதல் கதைகள், ரோமாபுரி ராணிகள் எழுதத்தான் தெரியும் அண்ணுதுரை கசாப்புக் கடை தான் வைக்கச் சொல்லுவார்—அவருக்கு அதற்குமேல் மூளை தான் ஏது!" என்று நமது நிதி, மதி படைத்தவர் போல் பேசுகிருர்!

"கசாப்புக்கடை வையுங்கள்" என்று கூறினல் நிதி அமைச்சருக்கு ரோஷம் பீறிட்டுக் கிளம்புகிறது! நீங்கள் கசாப்புக்கடை வைக்கக் கூட திறமையற்றவர்கள், அருகதையில்லாதவர்கள் என்று இப்போது புரியத்தான் செய்கிறது! சந்தர்ப்பத்தின் விளைவால் நாடு உங்கள் கையில் சிக்குண்டு போய் விட்டது! உங்களால் என்னென்ன செய்ய முடியுமோ அத்தனை திருவிளையாடல்களையும் விரைவிலேயே செய்து முடித்துக் கொள்ளுங்கள்! அநீதி நீண்ட நாள் நிலைக்காது! அக்கிரமங்கள் அதிக நாள் வாழாது! தடித்த வார்த்தைகளாலும், திமிரான பேச்சுகளாலும் மட்டுமே பெரிய மனிதராகிவிட முடியாது! முக மூடி ஒரு நாள் கிழியும்! அல்லது கிழிக்கப்படும்,

சர்வாதிகார கம்யூனிஸ்ட் சந்தி சிரிக்கிறது!

"குறுப்பான விழியைப்பார்! குமிழ் சிரிப்பைக் கண்டாயா? கன்னக் கதுப்பினிலே, கனி வாய் மழலையிலே நான் அடையும் இன்பத்திற்கு எல்லையே கிடையாது!'

"குழந்தை கூட சிகப்பாய் தான் இருக்கிறது என்ன இருந்தாலும் நீ பாக்கியசாலி தான்!" "இந்தக் குழந்தையால் தான் நான் உயிர் வாழ்கிறேன். இல்லையென்ருல் என் உடல், என்றே குளத்திலோ-கிணற்றிலோ மிதந்திருக்கும். என் கணவரும் இரண்டாந்தாரம் திருமணம் புரிந்து கொண்டிருப்பார்!"

"குழந்தை உன்னைப் போலவும் இல்லை. உன் கணவரைப் போலவும் இல்லை..."

"ஹா......"

"உன் தங்கை முகம் போல் இருக்கிறதே என்றேன்"

"என் தங்கை செங்கமலம் சொந்தமில்லையே தவிர தூரத்து உறவினள்......"

"அது தான் கேட்டேன்...ம் உன் தலைப்பிரசவம் இங்கேயா நடந்தது எனக்கு தெரியாதே."

"நான் பெற்ருல் அல்லவா, உனக்கு தெரிந்திருக்கும். இந்தக் குழந்தை செங்கமலத்தின் குழந்தை...எனக்குத்தான் அந்த பாக்கியம் இல்லையே!"

மற்றவள் பிள்ளையை மடி மீது வைத்து, உச்சி முகந்து, உள்ளன்பை சொரிந்து பிள்ளைப் பாசத்தை தீர்த்துக் கொள்ளும் மலடியைப் போல மாஸ்கோ குழந்தையை மடிமீது போட்டுக் கொண்டு குழந்தையின் குறு குறுப்பான விழியைப் பார்-சிவப்பான மேனியைப்பார்-என்றும் "சிந்தையைக் கவர்ந்து விட்ட செல்வமே ஆராரோ, விந்தை பல காட்டிடும் விழி முடி கண் வளராய்!" என்றும் பாடுகின்றனர் இந்திய கம்யூனிஸ்ட்கள்!

ரஷ்யாவின் சாதனைகளை பாரீர்! சமதர்ம குடியரசைக் காணீர் என்று முழக்கமிடும் கம்யூனிஸ்ட்டுகளுக்கு தி. மு. க. வின் ஜனநாயகப் பணியினை காண்கின்ற போது வயிற்றெரிச்சலோடு தாக்கியும் பேசியும், திரிகின்றனர்.

★ ★

"அண்ணுத்துரைக்கு என்ன தெரியும்?"

"உனக்கு தெரிந்ததைவிட பன்மடங்கு தெரியும்."

"அழகாகப் பேசத்தான் தெரியும் அரசியல் தெரியாது"

"நீங்கள் சட்ட சபையிலே இருந்தபோது என்ன செய்தீர்

கௌந்தி

கள்? இப்போது நாங்கள் என்ன செய்தோம்-செய்து வருகிறேம் என்பதை சட்ட சபை நடவடிக்கைகளைப் படித்துப்பார் தெரியும்!"

"மாஸ்கோவைப் பார்—மக்கள் சுகமாக வாழ்கிருர்கள். அந்த வாழவு வாழவே நாங்கள் இங்கு உழைக்கிறேம்!"

"மாஸ்கோவை தூரத்துப் பார்வையில் கண்டு ஏமாருதே, அதன் திரையை விலக்கிப்பார்! பிணக் குவியல்கள் தெரியும். எலும்புக் கூடுகள், ஒடிந்த கைகள், மண்டை ஓடுகள் இரத்த ஆறுகள் அத்தனையும் உன்னை பித்தனுக்கி விடும்

அதோ பார் மாலங்கோவின் உடல், அதற்கு பக்கத்திலே பார் மாலடோவின் பிணம்! அதற்கும் பக்கத்திலே தயாராக வெட்டப்பட்டிருக்கும் படுகுழியை பார்-உனக்காக அல்ல; நோயோடு போராடிக் கொண்டிருப்பதாகச் சொல்கிருர்களே புல்கானின்-அவருக்காக!

நீ செல்லும் பாதையின் நிலையைப் பார்த்தாயா? கேரளத்தைப்பார், நம்பூதிரி பாட்டின் ஆட்சியின் மாட்சியைப்பார் என்கிருயே அந்த ஆட்சி மட்டும் சும்மா இருந்ததா, இல்லையே! துப்பாக்கி துரைத்தனம் பலரை பலி வாங்கி விட்டதே! இந்தியாவிலும் மாஸ்கோவாக விளங்குகிறதே, கேரளம்! இன்னுமா உன் மனம் மாறவில்லை— இன்னுமா இந்தக் கொடுமைக்காரர்களின் கூடாரத்திலே இருக்கவிரும்புகிருய்? இன்னுமா அந்த சர்வாதிகார சோஷலிஸத்தை விரும்புகிருய்?"

"என்னை என்னச் செய்யச் சொல்கிருய்?"

"உன் இனம் திராவிட இனம்! உன் மொழி தமிழ்! உன் நாடு திராவிட நாடு! இதற்காகப் பாடுபடு! இதனுடைய அடிமை விலங்கை உடைத்தெறிய வா-புழுதிக் காற்று தன்னைத் தென்றலென்று கூறி சித்து விளையாடுகிறது! பித்தளை தன்னை பசும் பொன் என்று சொல்லி நம்மை ஏய்க்கிறது! அதன் பொய்த் திரையைக் கிழிக்க புயல் போல புறப்படு-நிமிர்ந்து நில்-நெஞ்சை உயர்த்து - வாளெடு - சூளுரை! திராவிடத் திருமாதாவின் குங்குமத்தை அழித்துவிட்ட குணக்கேடர்களைத் தேடு-பரணி பாடு வாழ்க திராவிடம் என்று முழக்கமிடு, செயல்படு!"

"பொது உடமை லட்சியம் என்னை போகாதே என்று தடுத்து நிற்கிறதே!"

"உங்கள் பொது உடமை பிணக் குவியலை வளர்க்கும் எங்கள் பொது உடமை ஜனநாயகத்தை பரப்பும்! சதியும் சர்வாதிகாரமும் நிறைந்தது உன் பொது உடமைப்பாதை—சமத்வமும் சகோதரத்வமும் நிறைந்தது எங்கள் பொது உடமைப் பாதை! உண்மையைத் தெரிந்து கொள்!"

"போராட்டமா—நீங்கள் எந்தப் போராட்டத்தை நடத்தினீர்கள்?"

"உங்களைப் போல ஹோட்டல் போராட்டம் நடத்துகிறவர்கள் அல்ல நாங்கள்! போராட்டம் நடத்தத்தான் உங்களுக்கு தெரியும். போராட்டத்தின் பலன்-விளைவு அத்தனையும் அறிந்தே நாங்கள் போராட்டம் நடத்துவோம்.

நீங்கள் நடத்தும் தொழிலாளர் போராட்டம் தஞ்சாவூர் மைனர் விளையாட்டு-நாங்கள் நடத்துகின்றபோராட்டம் நாட்டின் விடுதலைக்காக பரணிபாடுகின்ற வீரர்களின் உரிமைப் போராட்டம்!"

"புரிந்து கொண்டேன். நம் நாட்டிற்காக, நம்மக்களுக்காக—நலமான வாழ்வுக்காக தி.மு.க. வில் சேர்ந்து பணியாற்றுவேன் போதுமா?"

"உன்னைப் போலவே நம் நாடு திராவிட நாடு, நம் மொழி தமிழ், நம் இனம் திராவிட இனம் என்று மற்றவர்களும் புரிந்து கொள்ளவேண்டும்!"

"சர்வாதிகார கம்யூனிஸ்டின் போக்கு சந்தி சிரிக்கிறது! சரித்திரம் இடம்தராது சாகின்ற கொள்கைக்கு சமாதி எழும்பும் காலம் வெகு தூரத்தில் இல்லை."

கழகத் தோழர்கள் கவனிக்கவும்

மாலைமணி நமது கழகச் செய்திகளை வெளியிடகாத்திருக்கிறது. ஆங்காங்கே நடைபெறும் கழகப்பணிகளைக் குறித்து செய்திகளை அனுப்பும்படி கழகத்தின் செயலாளர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேம்.

ஆசிரியர்
மாலைமணி

ஒளி விளக்கு

[சிறைக் கதவுகள் திறந்து விடப்படுகின்றன. மொஹலாய சாம்ராஜ்யத்தின் மன்னன் ஜஹாங்கீர் சிறையினுள் நுழைகிருன். அங்கே ஒருபெண் தன் பெண் குழந்தையுடன் எழுந்து நிற்கிருள் மருண்ட பார்வையை வீசியவாறு. காவலாளிகள், படைத் தளபதி, மந்திரி எல்லோரும் போய் விடுகின்றனர். ஜஹாங்கீர் முன்னேக்கி நடக்கிருன். அவள் மெதுவாகப் பின்னேக்கி அடியெடுத்து வைக்கிருள்)

ஜஹாங்கீர்:—மொஹர் உன்னிசா நல்லதொரு முடிவுக்கு வந்திருப்பாய் என நினைக்கிறேன்.

[மொஹர் மௌனமாக நிற்கிருள்]

ஜஹாங்கீர் :—மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி...சம்... மதிக் ...கிருயா... !

மொஹர் :—சம்மதிக்கிறேன் ! ஆம்! சம்மதிக்கிறேன்! கொஞ்சம் நஞ்சு கொடுங்கள்—என் கொஞ்சும் செல்வமும் நானும் உங்கள் காலடியிலேயே மடிந்து நிம்மதி காணுகிருேம்.

ஜஹாங்கீர் : — நிம்மதியின் நெடுந்தொலைவினின்றும் தவிக்கிறேன் நான். நாட்டின் பரப்பு—அது காட்டி நிற்கும் சிறப்பு—எழில் கூட்டி நிற்கும் உன் உருவத்தின் முன் கவைக்குதவாததாக, கனவுப் பொருளாகக் காட்சியளிக்கிறது, ஒளி விளக்கே! ஒன்பான் சுவையே!! ஓவியமே!!! பாதுஷா என்று பலரும் பாராட்டும்பொழுது விரிவடையும் இதயம் நீ இல்லையே என்று எண்ணும் பொழுது எள்ளினும் மிகவாகச் சுருங்கிவிடுகின்றது. தொடுவானக் கரையிலே தொத்திக்கிடக்கும் அழகு—முழு நிலவின் மோகனப் பொலிவு—ஆற்றோரத்திலே செறிந்திருக்கும் எழில் அத்தனையும் உன் வதனத்தின் முன், வைரத்தின் முன் கற்களாகத் தோன்றுகிறது. ராஜ பாட்டையிலே வலம் வரும் பொழுது ஏற்படும் குதூகலத்தை விட சிறைக் கதவுகளைத் தாண்டி உள்ளே வருகையில் ஏற்படுகிற துவலய இன்பம் கூறும் தரத்தன்று, அன்பே ! ஆவியே!! ஆசையே!!! மொஹலாயத்தின் முடி இருந்தென்ன-முதன்மையான சரித்திரம் இருந்தென்ன? பசியா-புசிக்க பஞ்சபட்சிய பரா மன்னங்கள்-சோர்வா-சோபிதம் அளிக்க சொர்ண பிம்பங்கள்-தேவையா-தேவையின் நிழல் கூடப்படாமல் பார்க்க எத்தனையோ பேர்—இருந்தென்ன! தாள் பிடிக்க ஆள்-தோள் பிடிக்க தோகையர்-தோத்திரத்திற்கோ —கணக்கற்றோர்—இருந்தென்ன! பிறைக் கொடியில் [illegible]ள் குறையின்றி இருக்கின்றனராம் — பிறைக் கொடியோன் புயல் படகாகத் தத்தளிக்கிருன்-இதய வெளியில் சூழ்ந்திருக்கின்ற இருளைப் போக்க முடியாது துன்பம் கசக்கிப் பிழியத் துடியாய்த் துடிக்கிருன், கண்ணே ! இதய இருளை அகற்றுயோ! இன்பம் தாராயோ!!

மொஹர் :—போதும் உன் பிரதாபம்! கண்ணுக்கு நேர் கணவனை கொன்றுவிட்டு அவர் அனுதினமும் ஆராதித்து வந்த அழகுத் தெய்வத்தை குப்பை மேட்டிலே போட்டு குளிப்பாட்டுகிறேன்-மலர் சொரிகிறேன் என்று கவிதை மழை பொழிய உனக்கு வெட்கமாயில்லை. கொடி சுற்றியிருக்கும் மரத்தை வெட்டி விட்டாயே பாவி! மகவிற்கு இரையூட்டும் பொழுது ஜோடியில் ஒன்றை சுட்டு வீழ்த்தி விட்டாயே மடையா! என்னையும் என் மகளையும் கொன்று விடு-ஏன் இப்படி சிறையில் போட்டு வதைக்கிருய்?

ஜஹாங்கீர் :—என் சிந்தைச் செல்வமே! சிறையில் போட்டு வாட்ட வேண்டும் என்பதல்ல என் நோக்கம். சிங்காதனத்திற்கு உரியவள் நீ! சிங்காதனத்திற்கு சிறப்பூட்டு என்றுதான் உன்னை அழைக்கிறேன்.

மொஹர்:—அன்பே உருவான அக்பரின் மகனு நீ! இந்திய வரலாற்றில் மொகலாய ஒளி பரப்பியவரின் வம்ச விளக்கா நீ!! அடுத்தவரின் மனைவி அழகாயிருப்பது குற்றமா? அதற்காக அவரைக் கொல்வது தான் நேர்மையா? நீசனே! போய்விடு நாங்கள் எப்படியோ தொலைந்து விடுகிருேம்.

ஜஹாங்கீர்:—இன்பக் காவியமே! உன் கணவனைக் கொன்றது குற்றம்தான். என்னை மன்னித்து விடு — உன்னைப் பார்த்ததிலிருந்து உயிரற்ற உடலாக-ஒளியற்ற வைரமாக-கண்ணற்ற ஓவியமாக-நடை பிணமாக உலவுகிறேன், உன் அழகெனும் ஒளிப்பிழம்பிலே பிறன் பொருள் என்பதெல்லாம் மறைந்து விட்டது. நீ பெண்ணின் பேரழகி நூர்ஜஹான்! நூர்ஜஹான் !!

மொஹர் :—என்னை மீண்டும் துன்புறுத்தாதே! துன்பத்தின் வெம்மை தாக்கும்போது புகழ்ச்சியின் குளிர்ச்சி தானே மறைந்து வீடும்! பொல்லாதவனே! போய்விடு இங்கிருந்து.

ஜஹாங்கீர் : —போய் விடுகிறேன்—போய் விடுகிறேன் தினம் தினம் வந்து போவது போல! ஆனுல் ஒன்று சொல்லுவேன்-என் இதயத்தை அணு அணுவாகப் பிரித்தாலும் அது கூட நூர்! நூர்! என்றுதான் சொல்லும், இதயத்தின் ஒவ்வோர் அணுவிலும் கலந்துவிட்ட நீயின்றி நிச்சயமாக கண்ணே! வாழ முடியாது. ஜஹாங்கீர் நூர்ஜஹானேடு வாழவேண்டும் இல்லை-நூர்ஜஹானின் மலர்ப் பாதங்களிலே மரணமடைந்தான் என்று சரித்திரம் சொல்ல வேண்டும். இரண்டிலொன்று நடக்கும் வரை உன்னை தினமும் தரிசித்துச் செல்வேன்-தரிசித்துச் செல்வேன். வருகிறேன்...

[ஜஹாங்கீர் போகிருன். சிறைக் கதவுகள் மூடப்படுகின்றன. மொஹரின் உள்ளத்திலே வேதனைப் புயல். தனக்குத் தானே பேசிக் கொள்கிருள்]

நூர்ஜஹான் :—சரியென்று சொல்லேன்! சக்ரவர்த்தினியாகி விடலாம்—பிறகு சாம்ராஜ்யம் உன் காலடியில்.

மொஹர்:—அதனுல் இறந்த கணவன் வருவாரா! இழந்த இன்பம் மீண்டும் வருமா? இணையுடன் வாழ முடியுமா?

நூர்ஜஹான்:—பைத்தியக்காரி! மண்டலாதிபதியே மண்டியிடுகிருன்-மகிழ்ச்சியைப் பற்றி யோசிக்கிருயே ! உன் கண் ஜாடைதான் சட்டம்-உன் சொல் தான் வேதம்.

மொஹர்:-எனக்குச் சரியென்று தோன்றவில்லை.

நூர்ஜஹான்:—ஆரம்பத்திலே அப்படித்தான் இருக்கும் முடிவு மங்களகரமாயிருக்கும்.

முகவை அரவொளி

மொஹர்:—கணவனைக் கொன்றவனிடம்— கண்ணைப் பறித்தவனிடம்-களிப்பை கருக்கியவனிடம் கருணை காட்டுவதா? பாம்பிற்குப் பால் வார்ப்பதா?

நூர்ஜஹான். —பழிக்குப் பழியென்ருலும் இதுதான் சிறந்த வழி!

மொஹர் :— என்னுடைய அழகில் சொக்கியவன் என்னிலும் மிக்காரைக் கண்டால் என் கதி!

நூர்ஜஹான் :—அங்கேயும் நீ தான் பிழை செய்கிருய். உன்னுடைய அழகை வளர்பிறையாக வைத்திருக்க வேண்டும், தேய்பிறை என்பதையே பொய்யாக்கிவிட வேண்டும்.

மொஹர்:—அவன் குடிகாரன் ஆயிற்றே?

நூர்ஜஹான்:- கோப்பையும் கோலும் உன்னுடைய கையிலிருந்தால்...

மொஹர்: என்ன சொல்லுகிருய்?

நூர்:-ஆட்சியும், அளவுடன் மது தரும் நிலையும் உன்னிடமே இருந்தால்...

மொஹர்:-அதற்குச் சம்மதிப்பானு?...

நூர்:-இவையெல்லாம் காதலின் கண்களுக்கு அருகாமையிலிருப்பவை.

[வேலைக்காரன் சாப்பாடு கொணருகிருன். வாங்கி தன் குழந்தைக்கு ஊட்டுகிருள்]

காட்சி- .

(ஜஹாங்கீர் கலைந்த தலையுடன் களையிழந்த முகத்துடன் கண்கள், ஒளியிழந்து கவலையுடன் அடிமேல் அடியெடுத்து நடந்து வருகிருன். சிறைக் கதவுகள் திறக்கப்படுகின்றன, உள்ளே நுழைகிருன் உழன்ற உள்ளத்துடன்)

ஜஹாங்கீர்:-தினம் தினம் தரிசிக்கிறேனே என் இதய தெய்வமே! தித்திப்புச் செய்திதாராயோ—இன்னும் திணறடிக்கத் தான் போகின்ருயோ!

மொஹர்;-ஏன் என்னை இப்படி தொந்தரவு செய்கிறீர்கள்?

ஜஹாங்கீர் :—சொல்லாதவை சொற்பம்-சொன்னவை அற்பம். மீதியையும் சொல்லிவிடுகிறேன் என் சொர்ண பிம்பமே! நீயின்றி வாழேன்—உறுதி கூறுகிறேன்-வளைந்தோடும் தென்றல் மீது-வானூர் வட்டத்தின் மீது-என் வாழ்வின் மீது.

மொஹர்.—நீங்களோ சாம்ராஜ்யாதிபதி-நானே சாதாரணமானவள் - சாமான்யமானவள்.

ஜஹாங்கீர்:—இல்லை! நீ என் இதயராணி-இந்த நாட்டுக்கும் ராணிதான்.

மொஹர்:-நிச்சயமாகவா!

ஜஹாங்கீர்: உண்மையைப்பூஜிப்பவன் நான்! எது வேண்டுமானுலும் கேள் தருகிறேன்—உன்னை எனக்குத் தந்தாக வேண்டும்.

மொஹர் :- இந்த ஆட்சியை நானே பரிபாலிக்க வேண்டும்!

ஜஹாங்கீர்:—சிந்தை இன்பம் மட்டும் கிடைக்கும் என்று எண்ணினேன்-சிரமமும் குறைகிறது.

மொஹர் . - அது மட்டுமல்ல, கண்ணளா !

ஜஹாங்கீர்;—வேறு என்ன வேண்டும்! சொல் !! உடனே சொல்!!

மொஹர்:-நானே தான் உங்களுக்கு மது ஊற்றிக் தருவேன் நான் தருவதைத்தான் பருக வேண்டும்.

ஜஹாங்கீர்:-மது புளிக்கும்- இனி எப்பொழுதும் இனிக்கும்.

மொஹர்:-கண்ணளா!

ஜஹாங்கீர் :—நூர்ஜஹான்— நூர்ஜஹான்

[இருவரும் இணைகிருர்கள்: அவள் அமுத அதரம் அவன் உதடுகளோடு இணைகின்றது, இன்பம்—கொள்ளை! கொள்ளை!! கொள்ளை !!!]

எழுத்தாளர்கள் கவனிக்கவும்

இளம் எழுத்தாளர்களை மாலைமணி ஊக்குவிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிருேம். அரசியல் கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படும். சிறந்த கதைகளுக்கும், கட்டுரைகளுக்குப் பரிசும் அளிக்கப்படும். ஆர்வமுள்ள எழுத்தாள நண்பர்கள் எழுதியனுப்பும்படி வேண்டுகிருேம்.

ஆசிரியர்,
மாலைமணி.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பத்தில் உள்ள சில பெரியவர்கள் பழமைவிரும்பியாகவும் இருக்கலாம்! அவர்கள் நிச்சயமாக நமக்கு ஓட்டளிக்க மாட்டார்கள்! அவர்களிடத்தில் நம்முடைய கொள்கைகளை எடுத்துச் சொல்லி அவர்களைத் திருத்துவது நம்முடைய கடமையாகும்!

ஒவ்வொரு இளைஞனும் தன் குடும்பத்தில் உள்ள பெரியவர்களிடத்தில் நம்முடைய இலட்சியங்களைப்பற்றி—ஆத்திரப்படாமல், ஆவேசங்கொள்ளாமல், உணர்ச்சி வசப்படாமல் சொல்லி மெல்ல மெல்ல அவர்களை நம்பக்கம் திருப்ப வேண்டும்!

காஞ்சிபுரத்தில் நமது அண்ணா அவர்கள் தேர்தலில் நின்றால் நாம் கூட்டம் போட்டுதான் பேசுகிறோம். ஊர் ஊராகச் சென்று ஓட்டுகளையும் கேட்கிறோம்! ஆனால் வீட்டில் உள்ள வைதீகத் தந்தையிடம், தாயிடம் "அண்ணாவுக்கு ஓட்டுப் போடுங்கள்" என்று சொல்லுவதில்லை! காரணம், அவர்கள் போடமாட்டார்கள்" என்று நாமே முடிவு செய்துக் கொண்டு விடுகிறோம்!

"அண்ணா ஆற்றல் மிக்கவர், கருணாநிதி நல்ல செயல் வீரர்" என்று அவர்களிடம் நாம் சொல்லவே அஞ்சுகிறோம்!

அப்படி நாம் சொன்னால்—"கோயிலை இடிப்பாராமே, கடவுளை ஒழிப்பாராமே" என்று சொல்லுவார்கள்! அவர்களிடம் நம்முடைய உண்மைக் கருத்துக்களை எடுத்துச் சொன்னால் நிச்சயமாக நம் பக்கம் வந்தே தீருவார்கள். "அப்பா! பச்சிளங் குழந்தைகள் பாலுக்கு அழும்போது இந்த கடவுளர்களுக்கு பாலாபிஷேகம் தேவைதானா? குந்த வீடின்றி, குடிக்கக் கூழ் இன்றி மக்கள் தவிக்கும் போது-கடவுளுக்கு கோட்டை போன்ற கோயில்கள் ஏன? ஆறு கால பூஜை ஏன்? இது அடுக்குமா அப்பா! இது நியாயந்தானா தந்தையே!" என்று எடுத்துக் கூறினால் அவர்களுடைய மனம் நிச்சயமாக மாறியே தீரும்!

அதோ பாருங்கள்! பத்தடுக்கு மாளிகையிலே பக்த வத்சலம் பாங்குடன் வீற்றிருக்கிறார்—நாமோ இந்த ஓலைக் குடிசையில்-அதுவும் ஒட்டைக் குடிசையில் வாழ்கிறோம்! கடவுள் உண்டென்றால்-அவர்தான் மனிதர்களைப் படைத்தார் என்றால்—அவர்படைப்பில் இந்த பேதம் ஏனப்பா!" என்று தெளிவாக எடுத்துச் சொல்வோமானால் நாம் நிச்சயமாக வெற்றி பெற முடியும்!

இதைப் போலவே நம்முடைய பிரிவினைக் கொள்கைகளை எடுத்துச் சொல்லி அவர்களைத் திருத்த வேண்டும்!

நம்முடைய இளைஞர்கள் அனைவரும் இந்த முறையில் உடனடியாக செயல்படுவார்களானால் இன்னும் ஐந்தே ஆண்டுகளில் நாம் திராவிட நாட்டை மீட்டுக் காட்ட முடியும்!

வீரமிக்க இளைஞர்களே! எழுச்சியும், புரட்சியும் கொண்ட வாலிபர்களே! அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயே நாம் அடிமை விலங்கை உடைத் தெறிய வேண்டும்! நம் பொன்னாட்டை மீட்டுக் காட்ட வேண்டும்! திராவிடத்தின் விடுதலைக் கொடியை வானளாவப் பறக்க விட்டு மகிழ வேண்டும்! அதற்காக உங்கள் வாழ்வைத் தத்தம் செய்துக் கொடுங்கள்! உங்கள் உயிரைப் பணயமாக வைத்துப் போராட வாருங்கள்!

உணர்ச்சி மிக்க இளைஞர்களே! உள்ளம் உறுதி படைத்த வீரர்களே! பத்துப் பதினைந்து ஆண்டுகளாக அண்ணாவின் வீரமிக்க சொற்களைக் கேட்கிறோம்! ஆற்றல் மிக்க எழுத்துக்களைப் படிக்கிறோம்! எங்கே உணர்ச்சி எங்கே பழந் தமிழனின் வீரம்? மாண்டொழிந்து விட்டதா?

அண்ணா பேசினால் கோழையும் வீரனாவானே! மோழையும் கொக்கரிப்பானே! எங்கே உங்களுக்கு வீரம்? எங்கே உங்களுக்கு வீரம்? ஏன் இன்னும் வரவில்லை?

அண்ணா அவர்கள் வேறு ஒரு அடிமை நாட்டில் பிறந்திருந்து, அந்த நாட்டு மக்கள் அண்ணா அவர்களின் பேச்சைக் கேட்டிருந்தால், எழுத்தைப் படித்திருந்தால் இத்தனை நாளாக அந்த நாடு ஏங்கிக் கொண்டா இருந்திருக்கும்? இத்தனை நாளாக அந்த நாடு அடிமைப்பட்டா இருந்திருக்கும்?

திறன் மிக்க மாலுமி இல்லாவிட்டால் கப்பல் திசை மாறி செல்லலாம்! பாய்மரம் இல்லாத கலம் கடலில் உடைந்து நொறுங்கலாம்! எல்லாம் இருந்தும் கப்பல் கரை காணா காரணம் என்ன? பிரயாணிகள் மீது குற்றமா? கடலின் கொந்தளிப்பா? சுறுமீன்களின் தாக்குதல்களா? என்ன காரணம்?

ஒவ்வொரு நாடும் தனக்குச் சரியான வழி காட்டி இல்லையே என்று ஏங்குகிறது! ஒவ்வொரு நாட்டு மக்களும் தங்களுக்குச் சரியான தலைவன் இல்லையே என்று தவிக்கிறார்கள்! நாமோ ஆற்றல்மிக்கவரை தலைவராகப் பெற்றிருக்கிறோம்! அறிவின் சிகரத்தை துணைவனாகக் கொண்டிருக்கிறோம்! இருந்தும் நாம் தூங்கிக் கொண்டு தான் இருக்கிறோம்!

எழுச்சி பெறுவோமா? நம் இலட்சியத்தை அடைவோமா? ஆம், என்றால் உங்கள் வாழ்க்கையை தத்தம் செய்யுங்கள்! உடனே செயல்படுங்கள்! கொடி பறக்கும்! ஆம், நம்முடைய விடுதலைக் கொடி பறக்கும்!

★ ★ ★ ★

அன்புக் கடிதம்— கம்யூனிஸ்ட் தோழருக்கு

(தென்றல் கூடலரசன்)

அன்புத் தோழரே! வணக்கம். நீண்ட நாட்களுக்குப்பின் சந்திக்கிறோம்—கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைக் குழப்பங்களைப் பற்றி மிக விரிவாக நேரில் சொல்லியிருக்கிறேன். மேலும் பல செய்திகளைக் கடிதங்களில் அனுப்பி வைக்க விரும்பியே இன்று துவங்கியிருக்கிறேன். உங்களுடைய வணக்கத்திற்குரிய ஜீவானந்தம் அவர்கள் புதுமைப் பெண்ணுக்குக் கடிதம் தீட்டிக் கொண்டிருக்கிறார். அவரும் அவரைச் சேர்ந்த 'ஜனசக்தி' சீடர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும் அதன் தலைவர்களைப் பற்றியும் தங்களுக்கே உரிய கீழ்த்தரமான வார்த்தைகளில் பேசியும் எழுதியும் வருவதை நீங்கள் அறிவீர்கள். அகமகிழ்ந்து கைதட்டி வரவேற்று வருகிறீர்கள். கழகத் தோழர்கள் கண்ணியத்தின் காவலராகக் காட்சிதரும் அறிஞர் அண்ணா அவர்களின் வழித்தோன்றல்களாக இருக்கின்ற காரணத்தினால் சிந்திக்கும்திறன் உங்களைப் போன்றவர்களிடம் தெரிவிக்கிறேன். உங்கள் 'ஜனசத்தி'யில் முன்பு 'ஈட்டி முனை' தாங்கியிருந்த ராமகிருஷ்ணன் என்ற பார்ப்பனக் கம்யூனிஸ்ட் பார்ப்பன இளைஞர் சங்க வேலைகளுக்குப் போய்விட்ட காரணத்தினால் முத்தையயா என்பவர் இப்போது பேனாவை ஈட்டியாக்கி கழகத்தின் நெஞ்சைத் துளைத்துவிடலாம் என்று கனவு காண்கிறார்—கங்கணம் கட்டிக் காத்திருக்கிறார். அவர் 30-10-58 இதழில் எழுதியிருப்பதைப் படித்துப் பார்த்தால் 'மூளைபலமில்லாத முத்தையயா' என்று தான் எண்ணத் தோன்றுகிறது. அறிஞர் அண்ணா அவர்களை "சிகாகோ டெய்லி டைம்ஸ்" இதழின் நிருபர் பிரிடன்பர்க் சந்தித்துப்பேசிய கருத்துக்களைக் கேலிசெய்திருக்கிறார், அமெரிக்கத் தோழருடன் சந்திப்பு நடத்திய காரணத்தை கம்யூனிஸ்ட்கள் கழகத்தின்மீது படிந்துவிட்ட களங்கம் என்னும் கருத்துப்பட வட சென்னையில் ஜீவானந்தம் ஒப்பாரி வைத்தார்-இந்த முத்தையயாவும் முணகியிருக்கிறார். சேலத்தில் கம்யூனிஸ்டகள் தாங்கள் தோற்றாலும் கவலையில்லை என்று கருதித்தான் காங்கிரஸ்காரனுக்கு ஓட்டுக்களைத் தந்து மாரியப்பனைப் பிழைக்க வைத்தார்கள். இதனை அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்க நிருபரிடம் அறிவித்தார்—கம்யூனிஸ்ட்கள் காங்கிரசுக்கு இரையாகவில்லை என்றால் பொதுச் செயலாளர் தோல்விக்கு கம்யூனிஸ்டுகள் காரணமாகவில்லை என்று தெரிவிக்கவேண்டும். அதைச்செய்யாமல் அமெரிக்கரிடத்தில் கம்யூனிஸ்டுகளைப் பற்றிய உண்மையைச் சொல்லலாமா என்று கேட்பதில் அரசியல் பண்பில்லை—அழகில்லை' கம்யூனிஸ்ட்கட்சியை எதிர்க்கும்படி ஊக்குவிப்பதற்காகவே அமெரிக்க முதலாளித்வம் கழகத்தவருக்கு வலை வீசுகிறது என்றும் தமிழனுக்கு ஈட்டிமுனையார் எச்சரிக்கை தருகிறார் யுகப்புரட்சி வீரர்கள் ஒரு சாதாரணப் பத்திரிகை நிருபரைப் பார்த்து நடுங்குவது ஏன்? நவராத்திரிக்கும் விடுமுறை பெற்று நவம்பர் புரட்சி தினத்திற்கும் ஓய்வுபெற்றுக் கொள்ளும் கம்யூனிஸ்ட் வீரர்கள் கழகத்தையும் மிக மிக குறைத்து மதிப்பிட்டு தாங்களே பெரிய கட்சிக்காரர்கள் என்று மார்தட்டிக் கொள்ளும் மாவீரர்கள் முன்பு பாக்தாஸ் தான்வழியாக அமெரிக்கப்பணம் அண்ணாதுரைக்கு வருவதாக ராமமூர்த்தி சொன்னபோதும் பெரிய கூட்டம் போட்டுப் பேசியதையும் நீங்கள் மறந்திருக்க முடியாது. ராமமூர்த்தி மட்டுமா அப்படிப்பேசினார்—அல்ல நண்பரே அல்ல--முத்துராமலிங்கத் தேவர்கூட சொன்னார்--ஆங்கிலோ-அமெரிக்கவாதிகளின் பணம் காமராசருக்கு அனுப்பப்பட்டு-அது விருதுநகர் நாடார் சமூக வியாபாரிகளின் வழியாக காஞ்சிபுரம் அண்ணாதுரை அவர்களுக்கு அனுப்பப்படுவதாகவும் பல கூட்டங்களில் துணிந்து பொய்யுரைத்தார்.

தென்னகத்து மக்களிடையே விலைபோகாத அந்தப் பழைய சரக்கை இப்போது 'ஜனசக்தி' வியாபாரிகள் முதுகிலே தூக்கித் திரியும்படி முத்தையா போன்றவர்களுக்கு கட்டளையிட்டுள்ளார்கள் போலும்! மாஸ்கோ சன்னிதானத்தின் நிரந்தர அடிமைகள் முன்னேற்றக்கழகத்தை அமெரிகக எடுபிடி என்று பேசுவது கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தோட்டததிலே உள்ள குருட்டுத் தன்மையென்பதை உங்களைப் போன்ற நல்ல கம்யூனிஸ்டுகள் அன்புகூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். விடுதலை இயக்கமாகத் திகழும் கழகம்

(6-ம் பக்கம் பார்க்கவும்)

திரைச் செய்திகள்

திருடாதே!

ஏஎல்எஸ் புரொடக்ஷன்சார் தயாரித்து வரும் இப்படம் வெகுவேகமாக பரணியில் வளர்ந்து வருகிறது. இதில் புரட்சி நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன், சரோஜாதேவி, எஸ். வரலக்ஷ்மி, முஸ்தபா ஆகியோர் முக்கிய பாத்திர மேற்றுநடித்து வருகின்றனர். இப்படம் பொங்கல் வெளியீடாக இருக்கும். இதை ப. நீலகண்டன் டைரக்ட் செய்து வருகிறார்.

ஜெயப்பூரில் கட்டபொம்மன்

பத்மினி பிக்சர்சார் கூட்டுத் தயாரிப்பில் தயாரித்து வரும் கட்டப்பொம்மன் வெளிப்புறக் காட்சிக்காக ஜெயப்பூர் சென்றிருக்கிறார்கள். ஜெய்ப்பூர் கோட்டையை கட்டப்பொம்மன் படப்பிடிப்பிற்காக மத்திய அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது. ஜெய்ப்பூர் கோட்டையில் சண்டைக் காட்சிகள் படமாக்கப்படும். வெளிப்புறக் காட்சியை படமாக்கி விட்டு அடுத்த மாதம் முதல் வாரத்தில் திரும்புவார்களாம்! கட்டப்பொம்மனில் சிவாஜி கணேசன், வி. கே. ராமசாமி, முஸ்தபா, பத்மினி ஆகியோர் முக்கிய பாத்திரமேற்று நடிக்கின்றனர்.

இதில் இதுவரை ஊமைத்துரையாக நடித்து வந்த இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன் உடல் நலக் குறைவால் அந்தப் பாகத்தை தொடர்ந்து நடிக்காமல் விலகிக் கொண்டார்.

கட்டப்பொம்மனுக்கு சக்தி கிருஷ்ணசாமி வசனமெழுதி இருக்கிறார். டைரக்ஷனை பி. ஆர். பந்துலு செய்கிறார்.

குறவஞ்சி

வெகு விரைவில் வெளிவரும் படங்களில் மேகலா பிக்சர்சாரின் குறவஞ்சியும் இடம் பெற்றிருக்கிறது. இதற்கு கதை வசனத்தை கலைஞர் மு. கருணாநிதி அமைத்துள்ளார், இதில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன், விஜயகுமாரியும் முக்கிய பாத்திரமேற்று நடிக்கின்றனர். இதை ஏ. காசிலிங்கம் டைரக்ட் செய்கிறார்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கம்யூனிஸ்ட்களால் நன்றாகப் புரிந்து கொள்ளப்படவில்லை என்பதற்கு இது சரியான சான்றாகும்.--

அறிஞர் அண்ணா அவர்கள் அறிவுலகத்தின் வாழ்த்துக்குரியவர்-மாற்றுக் கட்சியினரையும் மயக்கிடும் வசீகரம் படைத்தவர்-பிரிடன்பர்க் அவர்களைச் சந்தித்தால் அவர் அமெரிக்க தாசரென்றால்-அவர் உங்களின் வழிகாட்டி தோழர் ஜீவானந்தம் அவர்களையும் பலமுறை சந்தித்திருக்கிறார்-பொன்மலை ரயில்வே யூனியன் மாநாட்டுக்கு வருந்தி வருந்தி வந்து அழைத்துப் போனார்கள் கல்யாணசுந்தரம்--சிண்டன்-ஜீவானந்தம் மூவரும்! கம்யூனிஸ்ட்கள் கைதிகளாகச் சிறையிலும்- வாரண்டிற்கும் தப்பியவர்களாய் காடு மலைகளிலும் இருந்தபோது கம்யூனிஸ்டுகளை வேட்டையாட வேண்டாமென்று ஆட்சியாளருக்கு அறிவுரைகள் எழுதினார்—எனவே அவரைக் கம்யூனிஸ்ட்களின் தாசர் என்று இந்தியக் கம்யூனிஸ்ட்கள் ஏற்றுக் கொண்டார்களா? ஈட்டிமுனை வீரர்கள் இசைந்ததுண்டா? குன்றக்குடி அடிகளாரைப் பார்த்து பேசினால் அறிஞர் அண்ணா மடாதிபதிக்கு தாசரா? வினோபாவைக் கண்டால் அவ[...]ருத் தாசரா? காமராசருடன் தண்டலம் மாநாடு நடத்தினார் அதிலிருந்து அவர் காங்கிரஸ்காரரா? டாக்டர் லோகியா அறிஞர் அண்ணாவைக் கண்டார்—அதன்பிறகு அவர் சோசலிஸ்டுகளின் தொண்டரா? மாவீரன் ஜனாப்ஜின்னா அவர்களுடன் நட்புக் கொண்டிருந்தார் எனவே அவர் முஸ்லீம் லீக்கின் சீடரா? பிரிடன்பர்க் நிருபர் என்ற முறையில் சந்தித்தது அறிஞர் அண்ணா அவர்களின் இலட்சியத்தை தலை குப்புறக் கவிழ்த்துவிடும் என்றால் மேலே சொன்ன செய்திகளைப் பற்றியெல்லாம் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகளும் — பத்திரிகைகளும் எந்தக் கருத்தும் குற்றச்சாட்டும் சொல்லாமல் செவிடுகளாகவும் ஊமைகளாகவும் இருப்பது ஏன்? தமிழகத்து சிவஞானம்கூட சல்லடம் கட்டியிருக்கிறார். ஆனால் அவரும் அவரது சீடர்களும் அறிஞர் அண்ணா அவர்களுடன் பழகாமலா இருக்கிறார்கள்—இவர்களையெல்லாம் வெள்ளையர் தாசர்களென்று சொன்னால் மீசை துடிக்கப் பேசாமலா இருப்பார்கள்? கம்யூனிஸ்ட் நண்பரே தயைசெய்து இதனை எண்ணிப் பாருங்கள்! சிந்தியுங்கள்!

தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட் தலைவர்களை வட நாட்டுக் கம்யூனிஸ்ட்டுத் தலைவர்கள் மிக மிகக் கேவலமாக மதிக்கிறார்கள். இருந்தாலும் அவர்களின் தாள் பணியும் இவர்கள் கழகத் தலைவர்களைப் பற்றிப் பொல்லாது பேசி மனத்திருப்தி அடைகிறார்கள், அமெரிக்க நிருபர் விஜயம் இல்லாவிட்டால் வேறு ஏதாவது ஒருசெய்தியை வைத்து உரக்கப் பேசுவதில் உங்களுடைய தலைவர்களும் பத்திரிகையாசிரியர்களும் என்றும் தவறமாட்டார்கள். அண்ணா சொன்ன கருத்துக்கள் தவறென்றால் விமர்சனம் செய்யுங்கள்—அதைவிடுத்து அமெரிக்க துரைகளுக்குப்பணயமாகிவிட்டதாகப் பேசுவது கம்யூனிஸ்டுகளின் தத்துவத்திற்குப் பொருந்தாது! "திராவிட நாட்டின் அரசியல் அமைப்பு ஜனநாயகமாகவும் சமுதாய அமைப்பு சாதி பேத மற்ற சமதர்ம அமைப்பாகவும் இருக்கும். மத்தியப் பாராளுமன்றம் ஒன்று இருக்கும் ஆனால் மாநிலங்கள் தம் நிறைவு பெற்றனவாய் பிரிந்து போகும் உரிமையும் தரப்பட்டு இருக்கும். திராவிடம் பொருளாதார பலம் பெற்றதாக நிச்சயம்இருக்கமுடியும். திராவிட நாடு கேட்கவேண்டிய தேவை மனிதனுக்கு இயற்கையாக எழுகின்ற உரிமை உணர்ச்சி. நாங்கள் பலநூற்றாண்டுகளாகத் தனித்து வாழ்ந்தவர்கள். எங்கள் முன்னோர்கள் பெயரோடும் புகழோடும் வாழ்ந்திருக்கிறார்கள். ஆங்கிலேயர் இங்கே வந்து தங்கள் நிர்வாக வசதிக்காக ஒரு போலி ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு முன்னால் திராவிடம் என்றுமே வட நாட்டுடன் இணைந்து இருந்ததில்லை."

இந்தப் பொன் மொழிகளைத் தான் அறிஞர் அண்ணா அவர்கள் அந்த அமெரிக்க நிருபரிடத்தில் சொல்லியிருக்கிறார். கடைசி இரண்டு வரிகளை வைத்துக் கணக்கிடும் கம்யூனிஸ்ட்கள் இது போன்ற பல கருத்துக்களைக் கண்டும் காணாத ஒளி யிழந்த கண்ணினராக இருப்பது ஏன்? அரைகுறையாகப் படித்துவிட்டு அவதூறுகளை அள்ளித் தெளிக்க வேண்டாம்! தொல்காப்பியத்திற்கும் புதுவிளக்கம் கொடுக்கும் ஜீவானந்தங்கள் அதனை அஜய்கோசுக்கு அறிவிக்கட்டும். எத்தனைபேர்கள் ஜீவானந்தம் சொல்வது சரியென்று ஒப்புக் கொள்கிறார்கள். கவனித்துப் பாருங்கள்? பாரதப் பண்பும் பாஞ்சாலியின் பத்தினித் தன்மையும் திராவிடப் பண்பின் அடையாளத்திற்கு நெடுந் தொலைவிலே இருப்பவை என்பதனை நீங்கள் அன்பு கூர்ந்து உங்களைத் தாங்கி நிற்கும் தலைவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுங்கள். கடிதத்தைப் பெரிதும் விரிவாக்கிவிட்டேன் மன்னியுங்கள்.

★

இலங்கையில் அண்ணா பகுத்தறிவு மன்றம்.

அண்ணா பகுத்தறிவு மன்றபொதுக்குழு 16-11-58 ஞாயிறு மாலை 2.மணிக்கு மன்றபணிமனையில் வைத்து திருவாளர்: பகுத்தறிவுப் பண்ணை பி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கூடியது. அது போது மன்றத்தின், இவ்வாண்டுக் குறிய நிர்வாகிகளாக கீழ் கண்டோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

தலைவர் திரு: க. சு. தமிழ் நாதன்

துணைத்தலைவர்:
டி. வி. நடராசா

செயலாளர்: வி.கே. சாமி

துணைச்செயலாளர்:
கோ. ச. அப்துல் அசன்

பொருளாளர்:
வை. மு. அழகேசன்

துணைப்பொருளாளா:
எம். எ. ரகீம்

மன்றப்பொருப்பாளர்:
வி. மாதவன்

கீழ்கண்டோர் மன்ற செயற்குழு உறுப்பினர்களாக தெர்ந்தெடுக்கப் பட்டனர்.

திருவாளர்கள்: எம். எஸ். குமார், க. சு. தமிழ் நாதன், வை. மு. அழகேசன், டி. வி. நடராசா, எஸ். எஸ்-சேகர், கே. சிவலிங்கம், கு. கருப்பையா, வி. மாதவன், பாண்டியன், கோ. ச. அப்துல் அசன், எம். எ. ரகீம், வி. கே. சாமி, குப்புசாமி, மணி, பி. சுப்பிரமணியம், ஆகியோர் செயற்குழு உறுப்பினர்கள்.

பின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

1. யாழ் நகரில் நடைபெறப்போகும் சாதி ஒழிப்பு மகாநாட்டை இம்மன்றம் முழுமனதுடன் ஆதரிப்பதுடன், சாதி ஒழிப்புக்காக போராட்டம் நடைபெறும் போதுமன்றத்தின் சார்பில் பலர் கலந்து கொள்வதென்று இம்மன்றம் தீர்மானிக்கிறது.

2. கொழும்பு நகரில் இருக்கும் தொழிற் கல்லூரியில் "சிங்களம்" மட்டும் என்னும் அரசியலாரின் கொள்கையை, மாற்றி சிங்களம் தமிழ் ஆகிய இருமொழி பேசும் மாணவர்களுக்கும் சம அந்தஸ்த்துடன், கூடிய இடவசதி அளிக்கும்படி இம்மன்றம் அரசியலாரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறது,

3, யாழ் நகரில் நிறுவப்படவிருக்கும் தொழிற் கல்லூரியை காலம் கடத்தாது, எவ்வித காரணத்தையும் கொண்டு சுணக்காது உடனடியாக திறக்க வேண்டும் என்று இம்மன்றம் அரசியலாரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

பின் எம். எஸ். குமார் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது

ஆசி[...] [...]ஸ். இளங்கோ, கல்விப்பிரகாசம் பிரஸ், 404, திருவல்லிக்கேணி ஹைரோடுசென்னை-5
[...]வலகம்: 1/35, வாணியர் தெரு, சென்னை-14.